DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 47/2021 |
| Deposition of witness | : | PW- 1 |
| Name | : | சுஜிதா |
| Father’s /Husband Name | : | சந்தானகிருஷ்ணன் |
| Village | : | திருச்சி |
| Taluk | : | திருச்சி |
| Age | : | 29 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day May, 2025.
Accused absent. Petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:–**

விபத்தில் இறந்துபோன சந்தானகிருஷ்ணன் எனது அப்பா. கடந்த 27.12.2020 ம் தேதி மதியம் 02.15 மணியளவில் நாகூர் சிபிசிஎல் கம்பெனியில் சிறப்பு காவல் அதிகாரியாக பணிபுரிந்து அன்றைய தினம் பணி முடித்து வீட்டிற்கு வருவதற்காக மயிலாடுதுறை முதல் திருவாரூர் சாலையில் சேந்தமங்களத்திற்கு முன்பாக இருசக்கர வாகனத்தில் வரும்போது TN 51 AB 5596 என்ற எண் கொண்ட மகேந்திரா டூரிஸ்ட் வேன் திருவாரூரிலிருந்து மயிலாடுதுறை நோக்கி எதிரே வந்து அதிவேகமாகவும் ஆரன் அடிக்காமலும் அஜாக்கிரதையாகவும் வந்து எனது அப்பா வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் எனது அப்பாவின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மேற்படி வாகனத்தை ஓட்டியது தரங்கம்பாடியை சேர்ந்த வெங்கடேசன் ஆவார். எனது அப்பாவை சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம், மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தோம். அங்கு அவர் ஒரு வாரம் மேல்சிகிச்சை அளிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனது தகப்பனார் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது நன்னிலம் போலிசார் வந்து விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்தின் காரணமாக தான் எனது தகப்பனார் இறந்துவிட்டார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி யார் கூறி தெரியும் என்றால் ஒரு பழக்கடை காரர் போன் மூலம் கூறியதால் தெரியும்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.05.14 03:37:48 +0530